1 5 செப் 2007
சென்னை-600 009
33777

சுருக்கம்

நிதிநிலை அறிக்கை – 2007–08ம் ஆண்டு பத்திரப்பதிவு மானியக் கோரிக்கையின் போது அமைச்சரால் அறிவிக்கப்பட்ட இனங்கள் – பத்து சார்பதிவாளர் அலுவலகங்களை மீண்டும் திறப்பது குறித்த அறிவிப்பின் மீது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத்(ஜி)துறை

அரசாணை (நிலை) எண்.166 நாள்:19.9.2007.

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.46, வணிகவரித்துறை, நாள் 28.5.2003.
2. அரசு நேர்முகக் கடித எண்.8178/ஜி/2007–1, நாள் 12.4.2007.
3. பதிவுத்துறைத் தலைவர் கடித எண்.62052/ஜி3/2006, நாள் 27.4.2007.
4. அரசு நேர்முகக் கடித எண்.8178/ஜி/2007–2, நாள் 4.5.2007.
5. பதிவுத்துறைத் தலைவர் நேர்முகக் கடித எண்.16911/ஜி3/2007, நாள் 17.5.2007, 4.6.2007 மற்றும் 19.6.2007.

---

ஆணை:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 5.4.2007 அன்று பத்திரப் பதிவு குறித்த 2007–08ம் ஆண்டின் மானியக் கோரிக்கை குறித்த விவாதத்தின் போது, மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலம்) அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை அறிவித்தார்.

"... 2 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் 10 சார் பதிவாளர் அலுவலகங்கள் மீண்டும் திறக்கப்படும் ..."

2. மேற்காணும் அமைச்சரின் அறிவிப்பினையொட்டி, ஏற்கெனவே மூடப்பட்ட சார்பதிவகங்களில் சிலவற்றை மீண்டும் திறக்கக் கோரியும், புதிதாக சில சார்பதிவகங்களை திறக்கக் கோரியும் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோரிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளை ஆய்வு செய்து பதிவுத் துறைத்தலைவர் தகுந்த கருத்துருக்களை அரசுக்கு அனுப்பியிருந்தார்.

3. பதிவுத்துறைத் தலைவரின் கருத்துருக்கள் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டன. அக்கருத்துருக்களின் அடிப்படையிலும் பொதுமக்களின் நலன் கருதியும் கீழ்க்காணும் பத்து இடங்களில் மீண்டும் சார்பதிவாளர் அலுவலகங்களைத் திறக்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது:

| | |
|---|---|
| 1. | சுப்பிரமணியபுரம், அறந்தாங்கி வட்டம், (பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம்), புதுக்கோட்டை மாவட்டம் |
| 2. | பாப்பாநாடு, (பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம்), ஒரத்தநாடு வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் |

| | |
|---|---|
| 3. | பெருநாழி, (இராமநாதபுரம் பதிவு மாவட்டம்),, கமுதி வட்டம், இராமநாதபுரம் மாவட்டம் |
| 4. | கீழ்கொடுங்காலூர், (செய்யார் பதிவு மாவட்டம்), திருவண்ணாமலை மாவட்டம் |
| 5. | வெம்பாக்கம், (செய்யார் பதிவு மாவட்டம்), திருவண்ணாமலை மாவட்டம் |
| 6. | சாலவாக்கம், (செங்கற்பட்டு பதிவு மாவட்டம்), காஞ்சிபுரம் மாவட்டம் |
| 7. | நாச்சியார்கோயில், (கும்பகோணம் பதிவு மாவட்டம்), கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் |
| 8. | நல்லூர், (விருத்தாச்சலம் பதிவு மாவட்டம்), கடலூர் மாவட்டம் |
| 9. | இரண்டாம்புலிக்காடு, (பட்டுகோட்டை பதிவு மாவட்டம்), தஞ்சாவூர் மாவட்டம் |
| 10. | உள்ளிக்கோட்டை, (பட்டுகோட்டை பதிவு மாவட்டம்) நாகப்பட்டினம் மாவட்டம் |

4. மேற்கூறப்பட்ட பத்து சார்பதிவகங்களுக்கு புதிய பணியிடங்கள் எதுவும் தோற்றுவிக்கப்பட மாட்டாது என்றும், பகராண்மை (redeployment) மூலம் பணியிடங்களை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்றும் பதிவுத்துறைத் தலைவருக்கு அறிவுறுத்தப்படுகிறது. பகராண்மை மற்றும் சார்பதிவகங்கள் எல்லை குறித்த அறிவிக்கைகள் தனியே வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேற்கூறிய சார்பதிவகங்களின் எல்லைகள் குறித்த வரைவு அறிவிக்கைகளை அரசுக்கு உடனடியாக அனுப்புமாறு பதிவுத் துறைத் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. காண்க: அ.சா.கு.எண்.122/ DS/RC/2007, நாள்: 19.9.2007.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.தேவராஜ்,
அரசு செயலாளர்.

பெறுநர்
பதிவுத்துறைத் தலைவர், சென்னை—28.
நிதித்துறை, சென்னை—9.
மாநிலக் கணக்காயர், சென்னை—18.
மாநிலக் கணக்காயர், சென்னை—35.
நகல்:
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, சென்னை— 9.
வணிகவரி மற்றும் பதிவுத் (எம், யு அநமு பிரிவுகள்) துறை, சென்னை— 9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 20/9/07
20/9/07